# என் இதய தெய்வமே என்னில் எழுந்து வா

என் இதய தெய்வமே என்னில் எழுந்து வா
உன் உறவை எண்ணியே  உள்ளம் ஏங்குதே
உயிரே எழுந்து வா உயிரே எழுந்து வா - 2

**1**
அணைத்துக் காக்கும் தாயின் அன்பும்
ஒருநாள் அழியலாம்
அறவழியில் நடத்தும் தந்தை
அன்பும் அழியலம் - 2
ஆனால் இயேசுவே - உன்
அன்பிற் அழிவுண்டோ ( 2 )
என் இனிய அன்பே எழுந்து வா

( என் இதய..)

**2**
வஞ்சம் கூறும் நண்பர் கூட்டம் இங்கு பலவுண்டு
தன்னலமே உருவெடுத்து உலவும் நட்புண்டு - 2
ஆனால் இயேசுவே நல் நண்பன் நீரன்றோ - 2
என் இனிய நண்பா எழுந்து வா

( என் இதய..)

**3**
பொய்மை மலிந்து மெய்மை மெலியும்
நிலையைக் காண்கின்றேன்
தீமை நிறைந்த உலகில் இன்று
அழிந்து மடிகின்றேன் -2
எந்தன் தெய்வமே - உன்
அன்பால் ஆளவா -2
என் உள்ளம் நிறைந்து வாழ வா

( என் இதய..)